# முழு ஆண்டு பொதுத்தேர்வு

ஏழாம் வகுப்பு **தமிழ்**

**நேரம் ; 2.30 மணி** **மதிப்பெண் : 100**

**மாணாக்கர் பெயர் :** **பதிவு எண் :**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |

**தேதி :**

==========================================================

**I – சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக** **10 X 1 = 10**

1. **மரம் வளர்த்தால்----------------------------பெறலாம்**
   அ) மாறி ஆ) மாரி இ) காரி ஈ) பாரி

2. **“ <u>இடர்</u> “** ஆழி நீங்குகவே – இத் தொடரில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள்-------------------
   அ) துன்பம் ஆ) மகிழ்ச்சி இ) இன்பம் ஈ) ஆர்வம்

3. **உழவர் சோற்று வயலில்-------------------நடுவர்**
   அ) செடி ஆ) பயிர் இ) மரம் ஈ) நாற்று

Padasalai.Net

4. **திருநெல்வேலி--------------------------மன்னர்களோடு தொடர்புடையது.**
   அ) சேர ஆ) சோழ இ) பாண்டிய ஈ) பல்லவ

5. **காந்தியடிகள் எப்போதும் -----------------------ப் பேசினார்**
   அ) வன்சொற்களை ஆ) அரசியலை இ) கதை ஈ) வாய்மையை

6. **“ வையகம் தகழியாக வார்கடல் நெய்யாக “ எனத் தொடங்கும் பாடலில் இடம்பெறும் அணி-------------------------**
   அ) உவமை அணி ஆ) உருவக அணி இ) ஏகதேச உருவக அணி ஈ) எடுத்துக்காட்டு உவமை அணி

7. **மனித வாழ்க்கையில் தேவைப்படுவது-----------------------------------**
   அ) பணம் ஆ) பொறுமை இ) புகழ் ஈ)வீடு

8. **கூடுகட்டத் தெரியாத பறவை-----------------------------------------------**
   அ) காக்கை ஆ) சிட்டுக்குருவி இ)குயில்
   ஈ) தூக்கணாங்குருவி

9. **காயிதேமில்லத்---------------------------பண்பிற்கு உதாரணமாக திகழ்ந்தார்.**
   அ) தண்மை ஆ)எளிமை இ) ஆடம்பரம் ஈ) பெருமை.

**10.பொருளின் பெயர் அதன் உறுப்புக்கு ஆகி வருவது----------------------**

அ) பொருளாகு பெயர் ஆ) சினையாகு பெயர்

இ) பண்பாகுபெயர் ஈ) இடவாகுபெயர்

**II – கோடிட்ட இடத்தை நிரப்புக : 5 X 1 = 5**

11. பொருந்தாத ஓசை உசையச் சொல்---------------------------------------
12. தற்போதைய தமிழக பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்-------------------
13. திருநெல்வேலி-------------------------------ஆற்றின் கரையில் அமைந்துள்ளது.
14. உலகம் உண்ண உண் : உடுத்த உடுப்பாய் என்று கூறியவர்-----------------
15. மனித வாழ்க்கையில் தேவைப்படுவதாக இயேசுநாதர் கூறுவது-----------------------------.

**III : பொருத்துக : 5 X 1 = 5**

16. வங்கம் - கொற்கை
17. நீகான் - கப்பல்
18. எல் - கலங்கரை விளக்கம்
19. கதிர் - பகல்
20. முத்துக்குளித்தல் - அறுத்தல்

Padasalai.Net

**IV – ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளி – 5 X 2=10**

21. பாரி மகளிரின் பெயர்களை எழுதுக ?
22. ஒரு நாட்டுக்கு எவையெல்லாம் அரண்களாக அமையும் ?
23. பொய்கை ஆழ்வாரும், பூதத்தாழ்வரும் அகல் விளக்காக எதனை உருவகப் படுத்துகின்றனர் ?
24. கல்வியையும், விளக்கையும் திருக்குறளார் எவ்வாறு ஒப்பிடுகிறார் ?
25. முதனிலை தெரிந்த தொழிற் பெயர் என்றால் என்ன ?
26. நீக்கவேண்டிய களை என்று அறநெறிச்சாரம் எதனைக் குறிப்பிடுகிறது?
27. உலகம் நிலைத் தடுமாறக் காரணம் யாது ?

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**V – இலக்கண வினாக்களுக்கு விடையளி ( 3க்கு மட்டும்) 3 X 2 = 6**

28. உவமை அணிக்கும், எடுத்துக் காட்டு உவமை அணிக்கும் உள்ள வேறுபாடு யாது ?
29. இரட்டைக் கிளவி, அடுக்குத் தொடர் – ஒப்பிடுக ?
30. காலங்கள் எத்தனை வகைப்படும் அவை யாவை ?
31. திரி சொல்லின் வகைகள் குறித்து விளக்குக ?
32. விகுதி எவற்றைக் காட்டும் ?

**VI – கலைச்சொல் அறிவோம் – எழுதுக 2 X 1 = 2**

33 – குறிக்கோள் 34. அயலவர்

**VII – சரியான வினைச் சொல்லை இட்டு நிரப்புக 2 X 1 = 2**

35 – தாஜ்மஹால்-------------------------------உள்ளது
36 – முதல் ஆழ்வார்கள்-----------------------பேர்.

**VIII** – சிறுவினா ( **இரண்டு வினாக்களுக்கு மட்டும்**) **2 X 5 = 10**

36 – ஆட்சி மொழி பற்றி காயிதேமில்லத்தின் கருத்துக்களை எழுதுக ?

37. பூதத்தாழ்வார் ஞான விளக்கு ஏற்றும் முறையை விளக்குக ?

38. இளம் வயதிலேயே செய்ய வேண்டிய செயல்களாக முனைப்பாடியார் கூறுவது யாது ?

**IX – மனப்பாடப் பாடல்களை அடிபிறழாமல் எழுதுக**

Padasalai.Net

39. ***வையம் தளியா***.....ல் தொடங்கி ***நீங்குகவே என்று*** “ வரை உள்ள புதுமை விளக்கு பாடலையும் **1 X 5 = 5**

40 “ வினையால் எனத் **தொடங்கும்** குறளையும், “ யான் “ என முடியும் குறளையும் எழுதுக **2 X 2 = 4**

**X – பின்வரும் தொடர்களில் உள்ள உவமை, உவமேயம், உவம உருபு ஆகியவற்றை கண்டறிந்து எழுதுக 6 X 1 = 6**

**( 41)**

| தொடர்கள் | உவமை | உவமேயம் | உவம உருபு |
|---|---|---|---|
| **தேண் போன்ற தமிழ்** | | | |
| **புலி போல பாய்ந்தான் சோழன்** | | | |
| **மயிலொப்ப ஆடினாள் மாதவி** | | | |

**XI – இரட்டை கிளவி தொடர் உருவாக்கு(** கமகம, சடசட, படபட, கடகட, சலசல ) **5 X 1 = 5**

42. மழை------------------------------எனப் பெய்தது.
43. பறவைகள்-------------------------எனப் பறந்தது
44. ரயில்----------------------------------என ஓடியது
45. ஆற்றில் நீர்------------------------என ஓடியது
46. மல்லிகை---------------------------என மனந்தது

**XII. கொடுக்கப்பட்டுள்ள ஊரின் பெயர்களில் இருந்து புதிய சொற்களை உருவாக்குக : 5 X 2 = 10**

47. நாகப்பட்டிணம்------------------, -------------------. ----------------
48. கன்னியாகுமரி-------------------. -------------------, ----------------
48. செங்கல்பட்டு --------------------, ------------------, -----------------
49. உதகமண்டலம்-------------------, ------------------, -------------------
50. பட்டுக்கோட்டை------------------, ------------------, -------------------

**XIII – பொது கட்டுரை எழுதுக 1 X 10 = 10**

51. என்னைக் கவர்ந்த நூல்

Padasalai.Net

**XIV – கடிதம் எழுதுக 1 X 10 = 10**

52. உங்கள் ஊரில் நடைபெறும் திருவிழாவைக் காண வருமாறு அழைப்பு விடுத்து உறவினருக்கு கடிதம் எழுது ?

தயாரித்தவர் ; மு. ஜமால் முகமது, தலைமையாசிரியர், மவுண்ட் ஹிரா மெற்றிக் பள்ளி, நெல்லிக்குப்பம்